வரு.72 இல. 46 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி

24 பக்கங்கள் 40/-

2020 நவம்பர் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
November 15 Sunday, 2020

துன்பத்திற்கு காரணம் பற்றுதலே 02

ஜனாதிபதியின் தேர்தல் வெற்றி 06

பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக ஈழத்து இலக்கியம் 12

நடிகையாகும் சானியா மிர்சா 24

கொரோனா தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள

இலங்கையரை அழைத்துவர வெளிவிவகார அமைச்சு தயார்

ஜனாதிபதியின் விசேட அனுமதிக்கமைய ஐந்து விமானங்கள் சேவையில்

கொவிட் 19 வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை ஐந்து விமானங்களில் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கு வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில் நவம்பர் 18 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 290 இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்துவரப்படவுள்ளதுடன் நவம்பர் 20 ஆம் திகதி [illegible] 100 பேர் கட்டாரிலிருந்தும் நவம்பர் 21 ஆம் திகதி 290 இலங்கையர்கள் ஓமானிலிருந்தும் அழைத்துவரப்படவுள்ளனர்.

நவம்பர் 26 ஆம் திகதி 290 இலங்கையர்கள் ஓமானில் இருந்து திருப்பி அழைத்துவரப்படவுள்ளனர்.

இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது ஐந்து விமானங்கள் மூலம் வெளிநாடுகளில் சிக்கியுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் செயற்பாடுகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

CLICK

சிட்னி சந்திரசேகர நேற்று திடீர் மரணம்

இலங்கை சினிமா வரலாற்றில் முக்கிய தடம் பதித்த பிரபல இயக்குனரும், பாடலாசிரியருமான சிட்னி சந்திரசேகர தனது 61வது வயதில் காலமானார்.

சுகயீனம் காரணமாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக அவரது குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா இறக்கிறார்க

சுகாதார அமைச்சின் பேச்சாளர் டாக்டர் ஜயருவன பண்டார

கொரோனா வைரஸ் தொற்றால் மக்கள் வீதியில் இறந்து கிடக்கின்றார்கள் என்று சமூகவலைத்தளங்களில் பகிரப்படும் செய்திகள் உண்மைக்குப் புறம்பானவையாகும் என சுகாதார அமைச்சின் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, கொரோனாவால் மக்கள் வீதியில் விழுந்து கிடப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் சில கருத்துக்கள் பகிரப்படுகின்றன. நாட்டில் தற்போது கொரோனாத் தொற்றால் தான் உயிரிழக்கின்றார்களா என்பது பரிசோதனைகளின் மூலமே உறுதிப்படுத்தப்பட வேண்டும். இதய நோய் அல்லது வேறு ஏதேனும் நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் கூட வீதியில் சென்று கொண்டிருக்கும் போது எதிர்பாராத விதமாக உயிரிழக்கக் கூடும். இவ்வாறு உயிரிழப்பவர்களின் பிரேத பரிசோதனைகள் நிறைவடையும் வரை கொரோனாத் தொற்று என்று கூற முடியாது.

ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான தொற்றாளர்கள் இனங்காணப்படுவது அபாயமான நிலைமையாகும். இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினராக பதவி ஏற்குமாறு பெசிலுக்கு அழைப்பு

SLPP எம்.பிக்கள் எழுத்து மூலம் கோரிக்கை

பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்குமாறு பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் பொதுஜன பெரமுன தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 பேரின் கையொப்பத்துடன் அவருக்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை கருத்திற் கொண்டும் பொதுஜன பெரமுனவின் முழுமையான ஒத்துழைப்பை நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கவும் பசில் ராஜபக்ஷ பாராளுமன்ற உறுப்பினராக மீண்டும் வர வேண்டும் என அந்த கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவை தவிர ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தொடர்பில் சிந்திக்க முடியாதெனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர்களான, சம்பத் அத்துகோரள,மேஜர் பிரதீப் உந்துகொட, 04

அமெரிக்காவில் அசுர வேகத்தில் பரவிவரும் கொரோனா வைரஸ்

- 24 மணிநேரத்தில் 1,190 பேர் பலி
- ஒரு இலட்சத்து 60,000 பேருக்கு தொற்று

அமெரிக்காவில் அசுர வேகத்தில் பரவிவரும் கொரோனா தொற்றினால், கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 61ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆயிரத்து 190 பேர் உயிரிழந்துள்ளனர். அமெரிக்காவில் வைரஸ் தொற்று பரவியதிலிருந்து பதிவான நாளொன்றுக்கான அதிகப்பட்ச பாதிப்பு எண்ணிக்கை இதுவாகும்.

உலகளவில் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட முதல் நாடாக விளங்கும் அமெரிக்காவில் இதுவரை மொத்தமாக ஒரு கோடியே 87இலட்சத்து மூவாயிரத்து 936பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இரண்டு இலட்சத்து 48ஆயிரத்து 585பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 38இலட்சத்து 97ஆயிரத்து 231பேர் அங்குள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். 19ஆயிரத்து 261பேர் தீவிர சிகிச்சை பிரிவில் 04

8 ஐ.ம.ச எம்.பிக்களுக்கு பிரத்தியேக ஆசனங்கள்

பாராளுமன்ற படைக்கள சேவிதர் கருத்து

20க்கு ஆதரவு வழங்கிய ஐக்கிய மக்கள் சக்தியின் 8 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்க்கட்சி வரிசையில் பிரத்தியேக ஆசனங்கள் ஒதுக்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆளும் கட்சி வரிசையில் ஆசன ஒதுக்கீடு மேற்கொள்ள போதுமான இடம் இல்லாமையே இதற்கு காரணமாகும் என கூறப்படுகிறது. அண்மையில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 20ஆம் திருத்த சட்டத்திற்கு ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் 04

கொரோனாவால் இறந்த முஸ்லிம்களின் உடல்கள்;

மன்னாரில் புதைப்பதானால் மக்கள் தொடர்பிலும் கரிசனை அவசியம்

ஓமந்தை விசேட நிருபர்

கொரோனாவால் மரணிக்கும் இஸ்லாமியர்களின் உடல்களை புதைப்பதற்காக மன்னார் முசலியில் இடம் ஒதுக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் தொடர்பிலும் கரிசனை கொள்ள வேண்டும் என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைகலநாதன் தெரிவித்தார்.

மன்னார் முசலிப்பகுதியில் கொரோனாவால் மரணிக்கும் முஸ்லிம்களின் உடல்களை புதைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவரால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, பல் வேறான 04